# ஜீவநதி

தெளிவான ஜீவத்தண்ணீருள்ள சுத்தமான நதி (வெளி. 22:1)

SEPTEMBER 2026



THAT THEY MAY HAVE LIFE
KANYAKUMARI DIOCESE C.S.I.

SHARJAH TAMIL CONGREGATION (CSI KANYAKUMARI DIOCESE)

Private circulation only.

ஷார்ஜா தமிழ் திருச்சபை - கன்னியாகுமரி பேராயம்
SHARJAH TAMIL CONGREGATION - KANYAKUMARI DIOCESE

# ஜீவநதி

செப்டம்பர் 2026 - இதழ் 229

**"என் ஆத்துமாவே, தேவனையே நோக்கி அமர்ந்திரு, நான் நம்புகிறது அவராலே வரும்."**

**சங்கீதம் 62:5.**

## SHARJAH TAMIL CONGREGATION

**(CSI KANYAKUMARI DIOCESE)**

**P.O.Box : 46121, Sharjah, U.A.E. Tel. / Fax : 06-5680727, Mobile : 050-9367576**

**For private circulation only**

# அனுதின மன்னா

**கர்த்தருடைய வேதம் குறைவற்றதும், ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறதுமாயிருக்கிறது. (சங்கீதம் 19:7)**

| தேதி | நாள் | காலை | சிந்தனை வசனம் | மாலை |
|---|---|---|---|---|
| 1 | செவ்வாய் | யாத் 23:3-9 | 23:9 | மத். 2:13-15 |
| 2 | புதன் | லேவி. 19:23-37 | 19:34 | லூக். 10:25-37 |
| 3 | வியாழன் | எபி. 13:1-6 | 13:2 | ஆதி. 47:1-6 |
| 4 | வெள்ளி | 3 யோவா. 1:5-11 | 1:5,8 | யோவா. 3:1-8 |
| 5 | சனி | ரூத் 2:1-12 | 2:12 | சங். 133 |
| 6 | ஞாயிறு | ஏசாயா 50:4-7 | 50:4 | யோவா. 1:35-42 |
| 7 | திங்கள் | தீத்து 2:1-10 | 2:7 | மாற். 4:13-20 |
| 8 | செவ்வாய் | நீதி. 4:1-9 | 4:7 | நீதி. 6:20-35 |
| 9 | புதன் | சங். 119:9-16 | 119:11 | எபி. 6:13-20 |
| 10 | வியாழன் | 2 பேதுரு 1:3-11 | 1:3 | மத். 5:28-48 |
| 11 | வெள்ளி | லூக்கா 5:1-11 | 5:5 | ஏசா. 44:21-28 |
| 12 | சனி | உபா. 6:4-8 | 6:4 | நீதி. 2:1-11 |
| 13 | ஞாயிறு | 1 சாமு. 25:25-35 | 25:33 | நியா. 5:1-13 |
| 14 | திங்கள் | மாற்கு 14:3-9 | 14:9 | எஸ். 4:1-17 |
| 15 | செவ்வாய் | மத்தேயு 15:21-28 | 15:23 | 1 இராஜா. 17:1-16 |
| 16 | புதன் | 2 இராஜா. 5:1-5 | 5:3 | அப்போ. 9:36-43 |
| 17 | வியாழன் | யாத். 2:1-10 | 2:2 | லூக். 8:1-3 |
| 18 | வெள்ளி | யோவான் 8:1-11 | 8:7 | லூக். 1:26-38 |
| 19 | சனி | லூக்கா 10:38-42 | 10:38 | 1 சாமு. 1:1-28 |
| 20 | ஞாயிறு | லூக்கா 10:25-37 | 10:26 | ரோம. 12:1-8 |
| 21 | திங்கள் | எரே. 29:1-7 | 29:7 | ஆப். 2:1-13 |
| 22 | செவ்வாய் | லூக்கா 9:51-55 | 9:54 | நீதி. 16:1-31 |
| 23 | புதன் | ரோமர் 12:9-18 | 12:10 | யோனா 4:1-11 |
| 24 | வியாழன் | 1 யோவா. 4:16-21 | 4:21 | ரோம. 10:5-13 |
| 25 | வெள்ளி | அப். 17:22-31 | 17:26 | ஆதி. 45:25-46 |
| 26 | சனி | லூக்கா 7:1-10 | 7:4 | ஆமோ. 1:11-15 |
| 27 | ஞாயிறு | லூக்கா 9:10-17 | 9:14 | யாத். 18:13-27 |
| 28 | திங்கள் | 1 கொரி. 3:1-9 | 3:19 | ஆதி. 49:1-28 |
| 29 | செவ்வாய் | மத்தேயு 18:1-6 | 18:4 | 1 இராஜா. 12:1-19 |
| 30 | புதன் | வேளி. 12:7-12 | 12:7 | லேவி. 19:1-32 |

# சபை ஆயரிடமிருந்து...

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே, **“நம்முடைய பிதாவாகிய தேவனாலும், கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக!”**

மீண்டும் ஒரு புதிய மாதத்தில் அடியெடுத்து வைக்க கிருபை செய்த நம் தேவாதி தேவனுக்கு துதி, ஸ்தோத்திரங்களை ஏறெடுக்கிறேன். உங்கள் ஒவ்வொருவருக்கும் எமது அன்பின் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இறைவன் நமது திருச்சபையை ஆச்சரியமான விதங்களில் வழிநடத்தி வருவதற்காக அவரைப் போற்றுகிறேன். நமது தொழுகைகளில் தேவனுடைய மேலான பிரசன்னம் தங்கியிருப்பதை எண்ணி அவருக்கு நன்றி செலுத்துகிறேன். தொடர்ந்து தூரநோக்குடனும், தகுந்த ஆலோசனைகளுடனும் நமது திருச்சபையின் நல்வாழ்விற்காக ஜெபித்து, ஆண்டவரில் வெற்றியைக் காண்போம்.

நமக்கு அறிமுகமானவர்களையும், நண்பர்களையும் நமது திருச்சபையின் தொழுகைகளில் பங்கேற்க உற்சாகப்படுத்தி, அன்புடன் அழைத்து வருவோம். ஒருவருக்கொருவர் அன்புடனும் ஐக்கியத்துடனும் தொடர்ந்து இறைப்பணியில் இணைந்து செயல்பட்டு, ஆண்டவர் நமக்குக் கொடுத்துள்ள பணியை மகிழ்ச்சியுடன் நிறைவேற்றுவோம்.

கடந்த மாதங்களில் புதிதாக நமது திருச்சபையின் ஐக்கியத்தில் இணைந்துள்ள அன்புச் சகோதரர்களையும், சகோதரிகளையும், குடும்பங்களையும் திருச்சபையின் சார்பாக கிறிஸ்துவின் நாமத்தில் அன்போடு வாழ்த்தி வரவேற்கிறேன். கர்த்தர் உங்கள் ஒவ்வொருவரையும், உங்கள் குடும்பங்களையும் மென்மேலும் ஆசீர்வதிப்பாராக.

நமது திருச்சபையின் இவ்வருட அறுப்பின் பண்டிகையான Harvest Festival, வழக்கம்போல Habitat Private School (Al Jurf - Ajman) வளாகத்தில், 11-10-2026 ஞாயிற்றுக்கிழமை மாலை 4:00 மணிக்கு நடைபெற உள்ளது.

இந்நிகழ்விற்கான ஆயத்தப் பணிகளை திரு. பினுகுமார் - கன்வீனர், திரு.பிரைனர் - இணை கன்வீனர், மற்றும் சபைக் குழு அங்கத்தினர்கள் இணைந்து செய்து வருகின்றனர்.

எனவே, திருச்சபையின் அன்பான சகோதரர், சகோதரிகள் அனைவரும் தங்களால் இயன்ற நல் ஆதரவை வழங்கி, இந்தப் பணியில் இணைந்து உழைக்கவும், தொடர்ந்து ஜெபிக்கவும், மேலும் அநேகரை இந்நிகழ்விற்கு அழைத்து வரவும் ஆயத்தப்படுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

நமது திருச்சபையின் விசுவாசிகளில் பலர் கோடை விடுமுறை நாட்களில் தாய்நாட்டிற்குச் சென்று, மீண்டும் பாதுகாப்பாகத் திரும்பி வருவதற்கு கர்த்தர் கிருபை செய்துள்ளார். அதற்காக தேவனுக்கு நன்றி செலுத்துவோம்.

விடுமுறை முடிந்து பள்ளிக்குச் செல்லவிருக்கும் நமது பிள்ளைகள் ஒவ்வொரு சூழ்நிலையிலும் தேவனால் பாதுகாக்கப்படவும், நல்ல ஆரோக்கியத்துடன் வளரவும், கல்வியில் சிறந்து விளங்கவும், அவர்களுடைய எதிர்காலம் சிறப்பாக அமையவும் தொடர்ந்து ஜெபித்துக்கொள்ளுங்கள்.

மேலும், இம்மாதம் முதல் தொடர்ந்து நடைபெறவுள்ள Junior Church மற்றும் பெண்கள் ஐக்கிய சங்கம் ஆகிய நிகழ்வுகளில் அனைவரும் தவறாமல் பங்கேற்று, அவற்றின் மூலம் ஆவிக்குரிய வாழ்வில் வளர்ந்து, ஒருவருக்கொருவர் உற்சாகமாக இருந்து, இறைப்பணியில் இணைந்து செயல்படுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

Mrs. & Mr. Bala Prakash - Veronica தம்பதியினரை கர்த்தர் ஆசீர்வதித்து, இரண்டு பெண் மகவுகளை அருளியிருக்கிறார். பெற்றோர்களையும், குழந்தைகளையும் திருச்சபையின் சார்பாக அன்புடன் வாழ்த்துகிறேன். ஆண்டவர் இந்தக் குழந்தைகளை தமது கிருபையிலும் பாதுகாப்பிலும் வளர்த்து, நல்ல ஆரோக்கியத்துடனும் ஞானத்துடனும் ஆசீர்வதிப்பாராக.

நமது திருச்சபையின் அங்கத்தினர்களான திரு. ராஜன் விக்டர் அவர்களின் மனைவி திருமதி. பொம்மி அவர்களின் தந்தையார் திரு. அம்ப்ரோஸ் அவர்களும், திரு. ஜிபில் ஜெபசிங் அவர்களின் தந்தையார் திரு. ஈசாக்கு அவர்களும், பலவீனத்தின் நிமித்தமாக கர்த்தருக்குள் நித்திரையடைந்துள்ளனர்.

அன்பான தந்தையர்களை இழந்து துயரத்தில் இருக்கும் இரு குடும்பத்தினரையும் ஆண்டவர் தமது ஆறுதலினால் தேற்றுவாராக. அவர்களுக்கு தேவையான பெலத்தையும் சமாதானத்தையும் அருள்வாராக. அவர்களுக்காக நாம் தொடர்ந்து ஜெபித்துக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அன்புக்குரியவர்களே, இந்தப் புதிய மாதத்திலும் நமது வாழ்க்கையில் பல்வேறு சூழ்நிலைகளை சந்தித்துக்கொண்டே பயணிக்கலாம். நமது எதிர்காலத்தைக் குறித்த தேவனுடைய திட்டம் நமக்குத் தெளிவாகத் தெரியாமல் இருக்கலாம். நாம் முன்னேறிச் செல்ல வேண்டிய பாதையில் ஒரு கதவு மூடப்பட்டிருக்கலாம். எதிர்காலம் எவ்வாறு அமையும் என்பது புரியாமல் குழப்பத்துடனும், எதிர்பார்ப்புடனும் நாம் பயணித்துக் கொண்டிருக்கலாம்.

ஆனால், அப்படிப்பட்ட நேரங்களில் நாம் நமது சூழ்நிலைகளைப் பார்த்து சோர்ந்துவிடாமல், சங்கீதக்காரனைப் போல நமது ஆத்துமாவிடம் பேசுவோம்: **“என் ஆத்துமாவே, தேவனையே நோக்கி அமர்ந்திரு, என் நம்பிக்கை அவராலே வரும்.”** சங்கீதம் 62:5

எதிர்காலம் நமக்குத் தெரியாமல் இருக்கலாம், ஆனால் நமது எதிர்காலம் தேவனுடைய கரங்களில் இருக்கிறது. நமக்காக எந்தக் கதவைத் திறக்க வேண்டும் என்பதும், எந்தப் பாதையில் நடத்த வேண்டும் என்பதும் அவருக்குத் தெரியும். ஆகையால், நமது நம்பிக்கையை மனிதர்களிடமோ, சூழ்நிலைகளிடமோ வைக்காமல், நம்மை ஒருபோதும் கைவிடாத ஆண்டவர்மீது வைப்போம்.

கதவுகள் மூடப்பட்டாலும் கலங்காதிருப்போம். பாதைகள் தெரியாவிட்டாலும் பயப்படாதிருப்போம். ஆண்டவர் நம்மை நடத்துகிறார் என்ற நம்பிக்கையுடன் அமைதியாக அவரையே நோக்கி அமர்ந்திருப்போம். அவர் நமது நம்பிக்கையாகவும், பெலனாகவும், வழிகாட்டியாகவும் இருப்பார்.

இந்தப் புதிய மாதத்தில் ஆண்டவருடைய பிரசன்னம் நம்மோடும், நமது குடும்பங்களோடும், நமது திருச்சபையோடும் தொடர்ந்து இருப்பதாக. நமது அனைத்து முயற்சிகளையும் ஆசீர்வதித்து, நமது ஜெபங்களுக்கு பதிலளித்து, நம்மை வெற்றியின் பாதையில் நடத்துவாராக.

ஆண்டவர் நம் அனைவரையும் தமது கிருபையிலும், சமாதானத்திலும், ஆசீர்வாதத்திலும் நடத்துவாராக! ஆமென்.

**இறைப்பணியில்**
**Rev. J. தேவராஜ ஜெபஸ்டின்**
**சபை ஆயர்.**

# அருளுரைப்பகுதி

**“நீர் ஏழைக்குப் பெலனும், நெருக்கப்படுகிற எளியவனுக்குத் திடனும், பெருவெள்ளத்துக்குத் தப்பும் அடைக்கலமும், வெயிலுக்கு ஒதுங்கும் நிழலுமானீர்.” (ஏசாயா 25:4)**

2026ஆம் ஆண்டின் 8 மாதங்கள் கடந்து விட்டன. நாம் கடந்து வந்த நாட்களைத் திரும்பிப் பார்க்கும்போது, நம்முடைய திறமையினாலோ, அறிவினாலோ, பெலத்தினாலோ மட்டுமல்ல, தேவனுடைய கிருபையினாலும் இரக்கத்தினாலும் இந்நாள் வரை நடத்தப்பட்டிருக்கிறோம் என்பதை உணர முடிகிறது. கடந்த நாட்களில் நம்மைத் தாங்கி, பாதுகாத்து, வழிநடத்தி, தேவையான நேரங்களில் ஆறுதலையும் பெலத்தையும் கொடுத்த கர்த்தருக்கு நாம் நன்றி செலுத்துவோம்.

இனி வரும் நாட்கள் எப்படி இருக்கும் என்பது நமக்குத் தெரியாது. நமது வாழ்க்கையில் என்னென்ன சூழ்நிலைகள் வரப்போகின்றன என்பதையும் நாம் அறியோம். மகிழ்ச்சியான நாட்களும் வரலாம், சவாலான நாட்களும் வரலாம். எதிர்பாராத பிரச்சனைகள் வரலாம், நாம் நினைத்திராத மாற்றங்கள் ஏற்படலாம். ஆனால் எதிர்காலம் நமக்குத் தெரியாவிட்டாலும், நம்மோடு இருப்பவர் யார் என்பது நமக்குத் தெரியும். அவர் நமது ஆண்டவராகிய தேவன்.

இதுதான் ஒரு விசுவாசியின் மிகப்பெரிய நம்பிக்கை. சூழ்நிலைகள் மாறலாம்�ளூ மனிதர்கள் மாறலாம், உலகத்தின் நிலைமைகள் மாறலாம். ஆனால் நம்முடைய தேவன் மாறாதவர். நாம் பலவீனமாகும்போது அவர் நமது பெலனாகிறார். நாம் பயப்படும்போது அவர் நமது அடைக்கலமாகிறார். நாம் சோர்ந்து போகும்போது அவர் நமது நிழலாகிறார். நாம் ஆபத்தை எதிர்கொள்ளும்போது அவர் நமது பாதுகாவலராகிறார்.

ஏசாயா தீர்க்கதரிசியின் காலத்திலும் தேவனுடைய மக்கள் பல்வேறு நெருக்கடிகளையும் அச்சுறுத்தல்களையும் எதிர்கொண்டார்கள். மனிதர்களின் பெலமும் பாதுகாப்பும் போதாத சூழ்நிலைகளில், தேவன் தாமே தமது மக்களுக்கு பாதுகாப்பாக இருப்பதாக அறிவிக்கிறார். அதனால்தான் ஏசாயா 25:4, **“நீர் ஏழைக்குப் பெலனும், நெருக்கப்படுகிற எளியவனுக்குத் திடனும், பெருவெள்ளத்துக்குத் தப்பும் அடைக்கலமும், வெயிலுக்கு ஒதுங்கும் நிழலுமானீர்”** என்று அழகாகச் சொல்கிறது.

இந்த வசனம் நமது வாழ்க்கைக்குத் தேவையான நான்கு முக்கியமான நம்பிக்கைகளை அளிக்கிறது.

**1. கர்த்தர் நமது பெலனாக இருக்கிறார்.**

“நீர் ஏழைக்குப் பெலனும், நெருக்கப்படுகிற எளியவனுக்குத் திடனும்” என்று ஏசாயா கூறுகிறார். வாழ்க்கையில் சில நேரங்களில் நமது சரீரம் சோர்ந்து போகலாம். மனம் உடைந்து போகலாம். ஆவிக்குரிய வாழ்க்கையிலும் நாம் பலவீனமடையலாம். சில நேரங்களில் “என்னால் இனிமேல் முடியாது” என்று நாம் நினைக்கலாம். பிரச்சனைகள் தொடர்ந்து வரும்போது நம்முடைய நம்பிக்கையும் குறைந்து போகலாம்.

ஆனால் அந்த நேரத்தில் தேவன் நம்மைப் பார்த்து, “உன் பெலன் உன்னிடத்தில் இல்லை, நான் உன் பெலன்” என்று கூறுகிறார்.

அப்போஸ்தலனாகிய பவுல், **“என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ் செய்ய எனக்குப் பெலனுண்டு”** என்று பிலிப்பியர் 4:13ல் கூறுகிறார். பவுலின் வாழ்க்கையில் சோதனைகள் இல்லாமல் போகவில்லை. ஆனால் சோதனைகளின் மத்தியில் அவரைத் தாங்கியவர் கிறிஸ்துவாக இருந்தார்.

எலியாவின் வாழ்க்கையையும் நாம் நினைத்துப் பார்க்கலாம். தேவனால் வல்லமையாகப் பயன்படுத்தப்பட்ட தீர்க்கதரிசியாக இருந்த எலியாவே ஒரு கட்டத்தில் மிகவும் சோர்ந்து போனார். அவர் மனதிலும் சரீரத்திலும் தளர்ந்து போனார். ஆனால் தேவன் அவரை கைவிடவில்லை. அவருக்கு உணவும் தண்ணீரும் கொடுத்து, அவரைத் தேற்றி, மீண்டும் பயணிக்கத் தேவையான பெலத்தை அளித்தார் என்று 1 இராஜாக்கள் 19:7-8 கூறுகிறது. அன்பானவர்களே, இன்று நீங்கள் எந்தப் பெலவீனத்தை எதிர்கொண்டாலும், உங்களைத் தாங்குவதற்கு கர்த்தர் போதுமானவர். உங்கள் சரீர பெலன் குறைந்திருக்கலாம், மனதில் பாரம் இருக்கலாம், குடும்பப் பிரச்சனைகள் இருக்கலாம், எதிர்காலத்தைப் பற்றிய கவலை இருக்கலாம். ஆனால் உங்கள் பெலவீனத்தை விட தேவனுடைய பெலன் பெரியது. எனவே “என்னால் முடியாது” என்று சொல்லாமல், “என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினால் என்னால் முடியும்” என்று விசுவாசத்தோடு சொல்லுவோம்.

**2. கர்த்தர் நமது அடைக்கலமாக இருக்கிறார்.**

ஏசாயா 25:4ல் கர்த்தர் "பெருவெள்ளத்துக்குத் தப்பும் அடைக்கலம்" என்று அழைக்கப்படுகிறார். பெருவெள்ளம் என்பது நமது வாழ்க்கையில் திடீரென்று வரும் பெரிய பிரச்சனைகளை நினைவுபடுத்துகிறது. சில பிரச்சனைகள் சிறிய மழையைப் போன்றவை, சில பிரச்சனைகள் பெருவெள்ளத்தைப் போன்றவை. அவை எப்போது வரும் என்பது நமக்குத் தெரியாது.

ஒரு நாள் எல்லாம் நன்றாக இருக்கலாம். மறுநாள் எதிர்பாராத செய்தி வரலாம். ஒரு குடும்பத்தில் பிரச்சனை எழலாம். பொருளாதார நெருக்கடி ஏற்படலாம். உறவுகளில் சிக்கல் வரலாம். வேலை அல்லது எதிர்காலத்தைப் பற்றிய கவலை வரலாம். அப்போது நாம் எங்கு ஓடுகிறோம் என்பதுதான் முக்கியம்.

சங்கீதக்காரன், **"கர்த்தரின் நாமம் பலத்த துருகம், நீதிமான் அதற்குள் ஓடிச் சுகமாயிருப்பான்"** என்று நீதிமொழிகள் 18:10ல் கூறுகிறார். பிரச்சனை இல்லாத வாழ்க்கையை தேவன் நமக்கு வாக்குக் கொடுக்கவில்லை. ஆனால் பிரச்சனையின் மத்தியில் நம்மைக் காப்பாற்றும் அடைக்கலமாக இருப்பதாக வாக்குக் கொடுத்திருக்கிறார்.

சீஷர்கள் இயேசுவோடு படகில் சென்றபோது, திடீரென்று கடலில் பெரும் புயல் எழுந்தது. சீஷர்கள் பயந்தார்கள். ஆனால் இயேசு அவர்களோடு படகில் இருந்தார். அவர் எழுந்து காற்றையும் கடலையும் அதட்டி, "இறைச்சலற்று அமைதியாயிரு" என்று கட்டளையிட்டபோது புயல் அடங்கியது. (மாற்கு 4:39)

அந்த சம்பவம் நமக்கு ஒரு பெரிய உண்மையைச் சொல்கிறது: புயல் நம்முடைய வாழ்க்கையில் வரலாம், ஆனால் புயலின் மத்தியில் இயேசு நம்மோடு இருந்தால் நாம் அழிந்து போக வேண்டியதில்லை.

புயல் பெரியதாக இருக்கலாம், ஆனால் நமது ஆண்டவர் அதைவிட பெரியவர். பிரச்சனை வலிமையாக இருக்கலாம், ஆனால் நமது தேவன் அதைவிட வல்லவர். சூழ்நிலை நம்மைச் சுற்றி மூடிக்கொள்ளலாம், ஆனால் கர்த்தருடைய கரம் நம்மைச் சுற்றிலும் இருக்கிறது.

**3. கர்த்தர் நமது நிழலாக இருக்கிறார்.**

ஏசாயா, “வெயிலுக்கு ஒதுங்கும் நிழலுமானீர்” என்று கூறுகிறார். பாலைவனத்தின் கடுமையான வெயிலில் ஒரு சிறிய நிழல் எவ்வளவு மதிப்புமிக்கதாக இருக்கும் என்பதை நாம் கற்பனை செய்யலாம். நிழல் வெயிலை அகற்றாமல் இருக்கலாம், ஆனால் வெயிலின் தாக்கத்திலிருந்து நம்மைக் காக்கிறது.

அதேபோல, வாழ்க்கையில் எல்லா சிரமங்களையும் தேவன் உடனடியாக அகற்றாமல் இருக்கலாம். ஆனால் அந்தச் சிரமங்களின் மத்தியில் நம்மைத் தாங்கி, பாதுகாத்து, ஆறுதல்படுத்தி, அமைதியை அளிக்கிறார்.

சங்கீதம் 121:5ல், **“கர்த்தர் உன்னைக் காக்கிறவர், கர்த்தர் உன் வலதுபுறத்தில் உனக்கு நிழலாயிருக்கிறார்”** என்று கூறப்படுகிறது. தேவனுடைய பிரசன்னம் நமக்கு நிழல் போன்றது. நாம் தனிமையில் இல்லை. நாம் கைவிடப்பட்டவர்கள் அல்ல.

வேலைப்பளு நம்மைச் சோர்வடையச் செய்யலாம். குடும்பப் பொறுப்புகள் நம்மை அழுத்தலாம். எதிர்காலத்தைப் பற்றிய கவலை நமது மனதை நிரப்பலாம். பலருடைய வார்த்தைகள் நம்மை காயப்படுத்தலாம். ஆனால் அந்த நேரத்தில் நாம் மனிதர்களை மட்டுமே நோக்கிப் பார்க்காமல், கர்த்தரை நோக்கிப் பார்க்க வேண்டும்.

ஏனென்றால், கர்த்தருடைய பிரசன்னம் சோர்ந்த உள்ளத்திற்கு இளைப்பாறுதலாகிறது. அவருடைய வார்த்தை கலங்கிய மனத்திற்கு சமாதானமாகிறது. அவருடைய கிருபை பலவீனமானவர்களுக்கு புதிய பெலனை அளிக்கிறது.

**4. கர்த்தர் நமது பாதுகாவலராக இருக்கிறார்.**

வாழ்க்கையில் நமக்கு எதிராக பல தடைகள் எழலாம். சில நேரங்களில் மனிதர்களின் எதிர்ப்பு இருக்கலாம். சில நேரங்களில் நமது சொந்த தவறுகளும் தடைகளாக மாறலாம். எதிர்பாராத சூழ்நிலைகளும் நம்மை அச்சுறுத்தலாம். ஆனால் இவை அனைத்திற்கும் மேலாக நம்மைக் காக்கிற தேவன் இருக்கிறார்.

ரோமர் 8:31ல் பவுல், “தேவன் நம்முடைய பட்சத்திலிருந்தால் நமக்கு விரோதமாயிருப்பவன் யார்?” என்று கேட்கிறார். இதன் பொருள் நமக்கு ஒருபோதும் எதிரிகள் இருக்கமாட்டார்கள் என்பதல்ல. ஆனால் நமக்கு எதிராக எழுகிற எந்த சக்தியும் தேவனைவிடப் பெரியதல்ல என்பதே அதன் நம்பிக்கை.

யாத்திராகமம் 14:14ல் மோசே இஸ்ரவேல் மக்களிடம், **“கர்த்தர் உங்களுக்காக யுத்தம்பண்ணுவார், நீங்கள் சும்மாயிருப்பீர்கள்”** என்று கூறுகிறார். முன்னால் செங்கடல், பின்னால் எகிப்திய இராணுவம். மனித பார்வையில் வழியில்லை. ஆனால் தேவனுடைய பார்வையில் வழி இருந்தது.

அதே தேவன் இன்றும் நம்முடைய தேவன். நமக்கு வழி தெரியாத இடத்தில் அவர் வழியை உருவாக்க முடியும். மனிதர்கள் கைவிடும் இடத்தில் அவர் கைவிடமாட்டார். எல்லா கதவுகளும் மூடப்பட்டதாகத் தோன்றும் நேரத்தில் அவர் புதிய கதவைத் திறக்க முடியும்.

ஆகவே, அன்பானவர்களே, எதிர்காலத்தைப் பற்றி பயப்பட வேண்டாம். நம்முடைய பாதுகாப்பு நமது சூழ்நிலைகளில் இல்லை, நமது பாதுகாப்பு கர்த்தரிடத்தில் இருக்கிறது. நமது நம்பிக்கை மனிதர்களில் இல்லை, நமது நம்பிக்கை தேவனில் இருக்கிறது.

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே, நமது வாழ்க்கையின் மிகப்பெரிய பாதுகாப்பு நமது செல்வம் அல்ல, நமது பதவி அல்ல, நமது மனித உறவுகள் அல்ல. நமது பாதுகாப்பு கர்த்தரே. நமது உண்மையான பெலன் கர்த்தரே. நமது அடைக்கலம் கர்த்தரே. நமது நிழல் கர்த்தரே.

ஆகையால், கடந்த நாட்களுக்காக நன்றி செலுத்துவோம். நிகழ்காலத்தில் அவரை நம்புவோம். எதிர்காலத்தை அவருடைய கரங்களில் ஒப்படைப்போம். ஆமென்.

**கிறிஸ்துவின் திருப்பணியில்**
**Rev. J. தேவராஜ ஜெபஸ்டின்**
**சபை ஆயர்**

# செயலர் மடல்

*"கர்த்தருக்கு அவருடைய நாமத்திற்குரிய மகிமையைச் செலுத்தி, காணிக்கைகளைக் கொண்டுவந்து, அவருடைய பிரகாரங்களில் பிரவேசியுங்கள்" (சங்கீதம் 95:8)*

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே!

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தினால் உங்கள் யாவருக்கும் சபைகுழு சார்பில் அன்பின் வாழ்த்துக்கள். கடந்த மாதம் நம் திருச்சபையின் ஊழியங்களில் உடனிருந்து யாவும் ஆசீர்வாதமாய் அமைந்திட வழிநடத்திய நம் தேவாதி தேவனுக்கு துதி ஸ்தோத்திரங்களை செலுத்துகிறேன்.

திருச்சபையின் திருப்பணிகளில் உற்சாகமாக நல்ல ஆதாவு தந்து பல நிலைகளில் உதவி செய்து வருகின்ற அனைத்து விசுவாசிகளையும் பாராட்டுகிறேன். வருகின்ற அக்டோபர் மாதம் 11-ஆம் நாள், நாம் நமது திருச்சபையின் அறுவடை பண்டிகையை ஆசரிக்க இருக்கிறோம். இதற்கான ஆயத்தங்களில், ஒவ்வொருவரும் அளித்து வருகிற ஆதரவுக்காக தேவனை ஸ்தோத்தரிக்கிறேன். Habitat Private School (Al Jurf - Ajman) -ல் அந்நாள் மாலை 4:00 மணி முதல் நடைபெறவுள்ள சிறப்பு நிகழ்வுகளில் நீங்கள் யாவரும் உற்சாகமாய் பங்குபெறவும், திருச்சபையின்மேல் வாஞ்சையுடைய நண்பர்களை அழைத்துவரவும் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அத்தோடு இப்பண்டிகையின் ஆசீர்வாதத்திற்காக தொடர்ந்து ஜெபித்துக்கொள்ளுங்கள்.

நம் திருச்சபை விசுவாசிகளில் பலர் கோடை விடுமுறை நாட்களில் தாய் தேசம் சென்றுவர கர்த்தர் கிருபை புரிந்தார், ஆண்டவரை போற்றுகிறேன். விடுமுறை முடித்து School செல்ல இருக்கும் நம்முடைய பிள்ளைகள் ஒவ்வொரு சூழ்நிலைகளிலும் தேவனால் பாதுகாக்கப்படவும், கல்வியில் சிறந்து விளங்கவும் ஜெபித்துக் கொள்ளுங்கள். இம்மாதம் முதல் தொடர்ந்து நடைபெறவுள்ள Junior Church மற்றும் பெண்கள் ஐக்கிய சங்க வகுப்புகள் ஒவ்வொன்றிலும் யாவரும் பங்கேற்க அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய திருச்சபையின் அங்கத்தினர்களான Mrs. & Mr. Bala prakash - Veronica தம்பதிகளை கர்த்தர் ஆசீர்வதித்து இரண்டு பெண் மகவுகளை தந்திருக்கிறார். பெற்றோர்களையும் குழந்தைகளையும் திருச்சபையின் சார்பாக வாழ்த்துகிறேன்.

நம்முடைய திருச்சபையின் அங்கத்தினர்களான திரு. ராஜன் விக்டர் மனைவி திருமதி. பொம்மி அவர்களின் தந்தையார் திரு. அம்ப்ரோஸ் மற்றும் திரு. ஜிபில் ஜெபசிங் அவர்களின் தந்தையர் திரு. ஈசாக்கு ஆகியோர் பலவீனத்தினிமித்தமாக கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்கள். அன்பு தந்தையர்களை இழந்து தவிக்கிற அவர்களது குடும்பத்தினர்களுக்காக தொடர்ந்து ஜெபித்துக் கொள்ளுங்கள்.

இந்த மாதம் திருச்சபையின் வாயிலாக நடைபெறுகிறதான ஊழியங்களில் உற்சாகமாய் பங்கேற்போம். திருச்சபையின் வளர்ச்சிக்காயும், விசுவாசிகளின் தேவைகள் சந்திக்கப்படவும் ஊக்கமாய் ஜெபிப்போம். தேவ ஆசீர்வாதங்களை சொந்தமாக்குவோம்.

**சபைக்குழு சார்பில்,**
**K. அருண்குமார் - செயலாளர்.**

# ஆண்கள் பகுதி

## நிக்கொதேமு - மறுபடியும் பிறக்க வேண்டிய மனிதன்

யோவான் 3:3 “ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான்.”

நிக்கொதேமு ஒரு மதத் தலைவராகவும், பரிசேயராகவும், யூதர்களின் அதிகாரியாகவும் இருந்தவர். அறிவும், அந்தஸ்தும், சமுதாயத்தில் மதிப்பும் அவருக்கு இருந்தன. ஆனால் இவை அனைத்திற்கும் நடுவில் அவரது ஆத்துமாவில் ஒரு தேடல் இருந்தது. அதனால் இரவில் இயேசுவிடம் வந்து, “ரபீ, நீர் தேவனிடத்திலிருந்து வந்த போதகர் என்று அறிந்திருக்கிறோம்” என்று கூறினார் (யோவான் 3:2). நிக்கொதேமுவின் வாழ்க்கை, வெளிப்புற மத வாழ்க்கை மட்டும் போதாது, உள்ளார்ந்த மறுபிறப்பு அவசியம் என்பதை நமக்குக் கற்றுக்கொடுக்கிறது.

இறையியல் அறிஞர் வில்லியம் பார்க்லே, நிக்கொதேமுவை உண்மையைத் தேடும் மனிதராகக் காண்கிறார். அவரிடம் அறிவு இருந்தது, ஆனால் இயேசு அவருக்குக் கொடுத்த சவால், அறிவைத் தாண்டி விசுவாசத்தின் அனுபவத்திற்குச் செல்ல வேண்டும் என்பதாகும். அதுபோல நம்மிடமும் குடும்பப் பொறுப்பு, தொழில், சமூக அந்தஸ்து, பொருளாதார நிலை ஆகியவை இருக்கலாம். ஆனால் கிறிஸ்துவோடு தனிப்பட்ட உறவு இல்லாவிட்டால் வாழ்க்கை முழுமையடையாது.

இயேசு நிக்கொதேமுவிடம், “நீங்கள் மறுபடியும் பிறக்க வேண்டும்” என்றார். மறுபிறப்பு என்பது உடல்ரீதியான மாற்றம் அல்ல, பரிசுத்த ஆவியானவரால் உள்ளம் புதுப்பிக்கப்படுதல் ஆகும். ஆண்களாகிய நாம் வெளியில் பலமானவர்களாகத் தோன்றலாம், ஆனால் நமது கோபம், அகந்தை, மன்னிக்காத மனம், இரகசியப் பாவங்கள், குடும்பத்தில் அன்பின்மை போன்றவற்றை ஆண்டவர் மாற்ற வேண்டும். உண்மையான கிறிஸ்தவ ஆண்மையின் அடையாளம் அதிகாரத்தில் அல்ல, கிறிஸ்துவைப் போன்ற குணத்தில் வெளிப்படுகிறது.

நிக்கொதேமுவின் வாழ்க்கையில் ஒரு முக்கியமான மாற்றத்தையும் காண்கிறோம். ஆரம்பத்தில் அவர் இரவில் இயேசுவைச் சந்தித்தார் (யோவான் 3:2). பின்னர் யூத அதிகாரிகளுக்கு முன்பாக இயேசுவுக்காக நியாயம் பேசினார் (யோவான் 7:50-51). இறுதியில் இயேசுவின் சரீரத்தை அடக்கம் செய்ய அரிமத்தியா யோசேப்புடன் துணிந்து நின்றார் (யோவான் 19:39-40). இரகசியமாக வந்தவர், வெளிப்படையாக கிறிஸ்துவுக்காக நிற்கும் மனிதராக மாறினார். இது ஆவிக்குரிய வளர்ச்சியின் அழகான சாட்சி. இன்று நம்மையே நாம் கேட்க வேண்டிய கேள்வி: “நான் கிறிஸ்துவை அறிவது மட்டுமா? அல்லது கிறிஸ்துவால் மாற்றப்பட்ட வாழ்க்கை வாழ்கிறேனா?” நமது வீடுகளில் நல்ல கணவனாகவும், பொறுப்புள்ள தந்தையாகவும், சாட்சியுள்ள விசுவாசியாகவும் இருக்க வேண்டும். “நானும் என் வீட்டாருமோவென்றால் கர்த்தரையே சேவிப்போம்” (யோசுவா 24:15) என்ற யோசுவாவின் தீர்மானம் ஒவ்வொரு கிறிஸ்தவ ஆணின் தீர்மானமாக இருக்கட்டும்.

நிக்கொதேமு நமக்குச் சொல்லும் செய்தி இதுதான்: வயது, அறிவு, பதவி, செல்வம், மதப்பணி ஆகியவை போதாது. மறுபடியும் பிறந்த இதயம் தேவை. கிறிஸ்துவைச் சந்தித்த மனிதன் தன்னை மட்டும் மாற்றிக் கொள்வதில்லை. தன் குடும்பத்தையும், சபையையும், சமுதாயத்தையும் ஆசீர்வதிக்கும் மனிதனாக மாறுகிறான். எனவே, **“ஆண்டவரே, என் வெளிப்புற வாழ்க்கையை மட்டுமல்ல, என் உள்ளத்தையும் புதுப்பியும். என்னை உமக்குப் பயன்படும் ஆணாக மாற்றும்”** என்று ஜெபிப்போம்.

**Rev. J. தேவராஜ ஜெபஸ்டின்**
**சபை ஆயர்**

# பெண்கள் பகுதி

## தீர்க்கதரிசியாகிய அன்னாள் (லூக்கா 2:36–38)

அன்னாள் வயதில் முதிர்ந்த ஒரு பெண். இளம் வயதிலேயே கணவனை இழந்திருந்தாலும், தனிமையும் துயரமும் அவளுடைய விசுவாசத்தை உடைக்கவில்லை. அவள் ஆலயத்தை விட்டு விலகாமல், இரவும் பகலும் உபவாசத்தோடும் ஜெபத்தோடும் தேவனை ஆராதித்தாள். இயேசு ஆலயத்திற்கு கொண்டு வரப்பட்டபோது, மற்றவர்கள் ஒரு குழந்தையைப் பார்த்தார்கள், ஆனால் அன்னாள் அந்தக் குழந்தையில் தேவனுடைய இரட்சிப்பைக் கண்டாள். அவள் தேவனைப் புகழ்ந்து, எருசலேமின் மீட்புக்காகக் காத்திருந்த அனைவருக்கும் இயேசுவைக் குறித்து அறிவித்தாள்.

அன்னாளின் வாழ்க்கையிலிருந்து பெண்கள் மூன்று முக்கியமான பாடங்களைக் கற்றுக்கொள்ளலாம்.

**1. மன உறுதி உள்ள தாயார்**

- அன்னாள் வாழ்க்கையில் இழப்பும் தனிமையும் இருந்தது. ஆனால் அவள் சோர்ந்து போகவில்லை. சூழ்நிலைகள் மாறவில்லை என்றாலும், அவளுடைய விசுவாசம் மாறவில்லை.
- துன்பம் அவளை தேவனிடமிருந்து விலக்கவில்லை, தேவனிடம் இன்னும் நெருக்கமாக்கியது.
- இன்றும் குடும்பப் பிரச்சினைகள், பிள்ளைகளின் கவலைகள், தனிமை, ஏமாற்றங்கள் என பல சவால்களை பெண்கள் சந்திக்கிறார்கள். அன்னாளைப் போல, சூழ்நிலை எப்படியிருந்தாலும் தேவனை நம்பும் மன உறுதியான பெண்களாக நாம் இருக்க வேண்டும்.

**2. ஜெபத்தை விட்டுக் கொடுக்காத தாயார்**

“அவள் ஆலயத்தை விட்டுப்போகாமல், இரவும் பகலும் உபவாசங்களோடும் விண்ணப்பங்களோடும் ஆராதனை செய்துகொண்டிருந்தாள்.” - லூக்கா 2:37

- அன்னாளின் வலிமையின் இரகசியம் அவளுடைய ஜெப வாழ்க்கை. பதில் தாமதமானாலும் அவள் ஜெபத்தை நிறுத்தவில்லை.
- ஒரு தாயின் ஜெபம் குடும்பத்தின் எதிர்காலத்தை மாற்றக்கூடியது. கணவனுக்காகவும், பிள்ளைகளுக்காகவும், குடும்பத்திற்காகவும், சபைக்காகவும் தொடர்ந்து ஜெபிக்கும் பெண்களாக நாம் இருக்க வேண்டும்.
- ஜெபத்தை விட்டுவிடாதீர்கள், பதில் தாமதமானாலும் தேவனை விட்டுவிடாதீர்கள்.

**3. வெளிப்பாடு உள்ள தாயார்**

- அன்னாள் இயேசுவைப் பார்த்தபோது, அவருடைய உண்மையான அடையாளத்தை அறிந்துகொண்டாள். அவள் மற்றவர்களுக்கு இயேசுவைக் குறித்து அறிவித்தாள்.
- இது ஆவிக்குரிய பார்வையின் அடையாளம். நாம் சூழ்நிலைகளை மனிதக் கண்களால் மட்டும் பார்க்காமல், தேவனுடைய பார்வையில் பார்க்க கற்றுக்கொள்ள வேண்டும்.
- தேவன் நமக்கு கொடுக்கும் ஆறுதல், அனுபவம், ஆசீர்வாதம் ஆகியவை நம்மோடு மட்டும் முடிந்து விடக்கூடாது. அவற்றின் மூலம் மற்றவர்களுக்கும் நம்பிக்கையையும் ஆறுதலையும் கொடுக்க வேண்டும்.

அன்புக்குரியவர்களே

அன்னாளின் வாழ்க்கை நமக்கு ஒரு அழகான முன்மாதிரி

- அன்னாள் துன்பத்திலும் விசுவாசமாக இருந்தாள்.
- அவள் காத்திருந்தாலும் ஜெபத்தை நிறுத்தவில்லை.
- அவள் தேவனைத் தேடியதால் தேவனுடைய செயலைக் காணமுடிந்தது.
- அவள் கண்டதை மற்றவர்களிடம் அறிவித்தாள்.
- அன்னாளைப் போல மன உறுதியான பெண்களாகவும், ஜெபத்தை விட்டுக் கொடுக்காத தாய்மார்களாகவும், தேவனுடைய செயல்களை அறியும் வெளிப்பாடு உள்ள பெண்களாகவும் வாழ்வோம்.

ஆண்டவர் தாமே நம்மை அனைவரையும் ஆசீர்வதித்து வழி நடத்துவாராக.

**திருமதி. P.ஜாண்சி**
**ஆயரம்மா.**

# திருக்குறள் வழி மறையறிவோம்

**திருக்குறள் 8**
**அறவாழி அந்தணன் தாள் சேர்ந்தார்க் கல்லால்**
**பிறவாழி நீந்தல் அரிது.**

திருவள்ளுவர், அறத்தின் கடலாகிய இறைவனுடைய திருவடிகளைச் சேர்ந்தவர்களால் மட்டுமே பிறவிப் பெருங்கடலைக் கடக்க முடியும் என்று கூறுகிறார். மனித வாழ்க்கை ஒரு கடலைப் போன்றது. அதில் துன்பம், சோதனை, பாவம், பயம், ஏமாற்றம், மரணம் போன்ற அலைகள்

எழுகின்றன. மனிதனுடைய சொந்த வலிமையால் இந்த வாழ்க்கைப் பெருங்கடலைக் கடப்பது கடினம். ஆனால் இறைவனைப் பற்றிக்கொண்டு வாழும்போது, அவர் நம்மை பாதுகாப்பாக நடத்திச் செல்கிறார்.

திருமறையும் இதே உண்மையை வலியுறுத்துகிறது.
**“நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன், என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்”** (யோவான் 14:6) என்று இயேசு கூறுகிறார். இரட்சிப்பிற்கான வழி மனிதனுடைய அறிவிலும், செல்வத்திலும், செயல்களிலும் அல்ல, கிறிஸ்துவில் உள்ளது.

**1. இறைவனுடைய பாதத்தைச் சார்ந்தால் பாதுகாப்பு உண்டு**
கடலில் பயணம் செய்கிற ஒருவர் தனியாக நீந்துவதைக் காட்டிலும், பாதுகாப்பான படகில் இருப்பது சிறந்தது. அதுபோல வாழ்க்கையின் புயல்களில் நம்முடைய சொந்த வலிமையை நம்பாமல் இறைவனைச் சார வேண்டும். “கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார், எனக்குக் குறைவில்லை.” (சங்கீதம் 23:1)

தாவீது தனது வாழ்க்கையில் பல ஆபத்துகளையும் எதிரிகளையும் சந்தித்தபோதும், கர்த்தரைத் தன் மேய்ப்பராகக் கொண்டிருந்ததால் பயப்படவில்லை. இறைவனுடைய கரம் நம்மோடு இருக்கும்போது, வாழ்க்கையின் அலைகள் நம்மை அழித்துவிட முடியாது.

**2. இறைவனுடைய வார்த்தையைப் பற்றிக்கொண்டால் வழி கிடைக்கும்**
கடலில் செல்லும் கப்பலுக்கு திசைகாட்டி தேவை. அதுபோல வாழ்க்கைப் பயணத்தில் நமக்கு தேவனுடைய வார்த்தை வழிகாட்டியாக இருக்கிறது.
“உமது வசனம் என் கால்களுக்கு தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது.” (சங்கீதம் 119:105)

உலகத்தின் பல குரல்கள் நம்மை பல்வேறு திசைகளுக்கு அழைக்கின்றன. ஆனால் தேவனுடைய வார்த்தை சரியான பாதையை காட்டுகிறது. எனவே இறைவனுடைய திருவடிகளைச் சேர்ந்த வாழ்க்கை என்பது அவருடைய வார்த்தையின்படி நடக்கும் வாழ்க்கையாகும்.

**3. கிறிஸ்துவைப் பற்றிக்கொண்டால் இரட்சிப்பு உண்டு**
திருக்குறள் “பிறவாழி நீந்துதல்” என்ற கருத்தை முன்வைக்கிறது. திருமறை அதைவிட ஆழமாக, பாவத்திலிருந்து விடுதலை பெற்று நித்திய ஜீவனை அடைவதற்கு கிறிஸ்துவே வழி என்று அறிவிக்கிறது.

“குமாரனை விசுவாசிக்கிறவனுக்கு நித்தியஜீவன் உண்டு.” (யோவான் 3:36) பேதுரு இயேசுவைக் குறித்து, “வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை” (அப்போஸ்தலர் 4:12) என்று அறிவித்தார். எனவே நமது வாழ்க்கையின் நம்பிக்கை கிறிஸ்துவில் இருக்க வேண்டும்.

அன்புக்குரியவர்களே,
வாழ்க்கை ஒரு பெருங்கடல். அதில் சோதனைகளும் கண்ணீர்களும் புயல்களும் இருக்கலாம். ஆனால் இறைவனுடைய பாதத்தைச் சேர்ந்தவர்களுக்கு பயப்பட வேண்டியதில்லை. அவருடைய வார்த்தை நமக்கு வெளிச்சம், அவருடைய கரம் நமக்கு பாதுகாப்பு, இயேசு கிறிஸ்து நமக்கு இரட்சிப்பின் வழி.

“அறவாழி அந்தணன் தாள் சேர்ந்தார்” என்ற திருவள்ளுவரின் கருத்தை, “கிறிஸ்துவில் நிலைத்திருங்கள்” என்ற திருமறையின் அழைப்போடு இணைத்துப் பார்க்கலாம்.

ஆகையால், நம் வாழ்க்கைப் பயணத்தில் உலகத்தை அல்ல, இறைவனைச் சார்ந்து, நமது அறிவை அல்ல, தேவனுடைய வார்த்தையைப் பற்றிக்கொண்டு, நமது வலிமையை அல்ல, இயேசு கிறிஸ்துவை நம்பி வாழ்வோம். அப்பொழுது வாழ்க்கையின் எந்தப் பெருங்கடலையும் நாம் விசுவாசத்தோடு கடந்து செல்ல முடியும்.

Compiled by **Mrs. Reji Alwin**

## கிறிஸ்துவின் மலைப்பிரசங்கத்தில் கிறிஸ்தவ பண்புகள்

““நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள், பரலோகராஜ்யம் அவர்களுடையது.” (மத்தேயு 5:10)

**நீதியினிமித்தம் துன்பம் அனுபவித்தல்**

மலைப்பிரசங்கத்தில் இயேசு கிறிஸ்து கூறிய ஆசீர்வாதங்களில், “நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்” என்பதும் ஒரு முக்கியமான உண்மையாகும். உலகத்தின் பார்வையில் துன்பம் என்பது தோல்வியாகத் தோன்றலாம். ஆனால் தேவனுடைய பார்வையில்,

நீதிக்காகவும், உண்மைக்காகவும், கிறிஸ்துவின் நாமத்திற்காகவும் அனுபவிக்கும் துன்பம் ஒரு பாக்கியம் ஆகும்.

நீதியினிமித்தம் துன்பப்படுதல் என்பது நாம் தவறு செய்ததால் வரும் தண்டனை அல்ல. மாறாக, தேவனுடைய வார்த்தைக்கு உண்மையாக வாழ்வதால், நேர்மையை விட்டுக்கொடுக்காமல் இருப்பதால், அநியாயத்திற்கு உடன்படாமல் இருப்பதால் ஏற்படும் துன்பமாகும். 1 பேதுரு 3:14 கூறுகிறது: “நீதியின் நிமித்தம் நீங்கள் பாடுபட்டாலும் பாக்கியவான்களாயிருப்பீர்கள்.”

வேதாகமத்தில் இதற்கு பல சிறந்த முன்மாதிரிகள் உள்ளன. தானியேல் தேவனுடைய கட்டளையை விட்டுவிடாமல் ஜெபித்ததால் சிங்கக்கெபியில் போடப்பட்டான். யோசேப்பு பாவத்திற்கு இடம் கொடுக்காமல் தேவனுக்கு உண்மையாக இருந்ததால் சிறையில் அடைக்கப்பட்டான். அப்போஸ்தலர்கள் இயேசுவைப் பற்றிய சுவிசேஷத்தை அறிவித்ததால் துன்பங்களையும் அவமானங்களையும் சந்தித்தார்கள். ஆனாலும் அவர்கள் தங்கள் விசுவாசத்தை விட்டுவிடவில்லை.

இயேசுவும் துன்பத்தின் வழியாகவே சிலுவையைச் சந்தித்தார். அவர் எந்தப் பாவமும் செய்யாமல், நமக்காக பாடுபட்டார். ஆகவே, கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்கள் நீதிக்காக துன்பத்தைச் சந்திக்கும்போது, அவர்கள் கிறிஸ்துவின் பாடுகளில் பங்குகொள்கிறார்கள். “கிறிஸ்துவின் நாமத்தினிமித்தம் நிந்திக்கப்படுகிறீர்களானால் பாக்கியவான்களாயிருக்கிறீர்கள்” என்று 1 பேதுரு 4:14 கூறுகிறது.

நீதிக்காக துன்பப்படுகிறவர்களுக்கு இயேசு ஒரு பெரிய வாக்குத்தத்தத்தையும் கொடுக்கிறார்: “பரலோகராஜ்யம் அவர்களுடையது.” உலகம் நம்மை நிராகரித்தாலும், தேவன் நம்மை ஏற்றுக்கொள்கிறார். மனிதர்கள் நம்முடைய உண்மையைப் புரிந்துகொள்ளாவிட்டாலும், தேவன் நம்முடைய இருதயத்தை அறிந்திருக்கிறார். ஆகவே துன்பம் வந்தபோது விசுவாசத்தை விட்டுவிடாமல், தேவனில் நிலைத்திருக்க வேண்டும்.

எனவே, நம்முடைய வாழ்க்கையில் நீதிக்காக துன்பம் வந்தால், “ஏன் எனக்கு மட்டும் இந்தத் துன்பம்?” என்று கேட்பதைவிட, “இந்தச் சூழ்நிலையிலும் நான் எப்படி கிறிஸ்துவுக்கு உண்மையாக இருக்க முடியும்?” என்று கேட்போம். உண்மைக்காக நிற்போம், தேவனுடைய வார்த்தையில் நிலைத்திருப்போம், அநியாயத்தோடு சமரசம் செய்யாமல் வாழ்வோம்.

அன்புக்குரியவர்களே நீதியினிமித்தம் அனுபவிக்கும் துன்பம் நமது தோல்வியின் அடையாளம் அல்ல, அது நமது விசுவாசத்தின் சாட்சியாகும். துன்பம் தற்காலிகமானது, ஆனால் தேவன் தரும் மகிமையும் பரலோக ராஜ்யத்தின் ஆசீர்வாதமும் நித்தியமானது. ஆகவே, நீதிக்காகத் துன்பப்பட்டாலும் தளராமல், கிறிஸ்துவில் நிலைத்திருந்து, விசுவாசத்தோடு ஓடுவோம்.

**By Mr. J.D.R.Alwin**

# மனிதர்களை தேடிய மாமனிதர்கள்

## அலெக்ஸாண்டர் மெக்கே (1849-1890)

**துணிந்து செயலாற்று**

1876ம் ஆண்டு. 27 வயது நிரம்பிய வாலிபன் ஆப்பிரிக்கா நாட்டிலுள்ள உகாண்டா என்ற பகுதிக்குப் பயணமானான். போகும் வழியிலோ பல தடைகள். கப்பல் கென்சிபர் என்ற இடத்தை அடைந்தபோது அவன் காய்ச்சலால் பாதிக்கப்பட்டான். சில நாட்கள் கப்பல் அங்கு நிற்கலாயிற்று. பின் மீண்டும் பணியைத் தொடர தென் ஆப்பிரிக்கா வந்தடைந்தான். அதிக எதிர்பார்ப்பும், அறியாமையும் மண்டிக் கிடந்த உகாண்டா தேசத்திற்கு முன்னோடி மிஷனெரியாகச் சென்று சுவிசேஷப் பணிக்கு பாதையை ஏற்படுத்திய பொறியாளரான அலெக்ஸாண்டர் மெக்கே என்பவரே அந்த வாலிபன்.

அடர்ந்த காட்டின் நடுவே, சிறு பூனை கூட நுழைந்து போக முடியாத இருண்ட பகுதியில் 230 மைலுக்கான பாதையைப் பல கடினமான சூழ்நிலைக்கு மத்தியில் அடைந்தார். இது கிறிஸ்து ராஜாவின் பாதையாக மாறியது. மேலும் இருண்ட மூட நம்பிக்கை கொண்ட மக்களின் மூடத்தனங்களைத் தகர்த்த எறியப் பாடுபட்டார். மக்கள் தீய ஆவிகளுக்குப் பயந்ததால் எப்பொழுதும் கழுத்திலும், கைகளிலும் தாயத்துகளை அணிந்திருந்தனர். அவைகளை இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அறுத்து எறிந்தார்.

உகாண்டா மக்களுக்குத் தொழிற்கூடம் அமைத்து இரும்பை உருக்கவும், பல இரும்பு சாமான்களைச் செய்யவும் கற்றுக் கொடுத்தார். பெண்கள்

மட்டுமே வேலை செய்ய வேண்டும் என்ற நிலையை மாற்றினார். புதிய ஏற்பாட்டுப் பகுதிகளை மொழிபெயர்த்து அவர்களுக்குக் கற்றுக் கொடுத்தார். கிறிஸ்தவர்களுக்குத் துன்பங்களும், உபத்திரவங்களும் ஏற்பட்டபோது அவர்களை விசுவாசத்தில் பெலப்படுத்தினார்.

14 வருடம் ஆப்பிரிக்க தேசத்திலே பணிபுரிந்த இவர் ஒருமுறை கூடத் தனது சொந்த நாடு திரும்பவில்லை. தனது 41வது வயதில் கொடூரமான விஷக்காய்ச்சலுக்கு பலியான மெக்கே தனது வாழ்வால் உகாண்டாவை கிறிஸ்துவின் கோட்டையாக மாற்றினார்.

அன்பரே, துணிந்து செயலாற்றும் பக்குவம் நம்மில் மலர வேண்டுமல்லவா?

**வாழ்விலிருந்து வாழ்வுக்கு**
ஆன்மாக்களுக்காக பற்றி எரியும் வைராக்கியத்தை, எனக்குத் தாரும் - அலெக்ஸாண்டர் மெக்கே
குயவனின் கரங்களில் : ஆண்டவரே! துணிந்து செயலாற்றும் துணிவுள்ள இருதயத்தை நாம் பெற்று, உமக்குள் செயல்பட உதவிடும்.

**By Mr. Alwin**

# சின்ன சின்ன சிந்தனைகள்

## வாழ்வுப் பயணம்

வாழ்க்கையை அணுகும் விதத்தை வைத்து மனிதர்களை மூன்று வகைகளாகப் பிரிக்கலாம்.

**அ. வாழ்க்கையை ‘மலையாய்’ பார்ப்பவர்கள்**
இவர்களைப் பொறுத்த அளவில் வாழ்க்கை மிகப்பெரிய சவால்.

மலையோடு மோதித் தங்களையேக் காயப்படுத்திக் கொள்ளும் மனிதர்களைப் போன்று, இவர்களும் வாழ்க்கையோடு போராடிப் போராடித் தங்களையே காயப்படுத்திக்கொள்கிறார்கள்.

வாழ்க்கையை இயக்கும் பிரபஞ்ச விதிமுறைகள் மற்றும் நெறிமுறைகள் மட்டில் விழிப்புணர்வற்றவர்கள். 'கடினஉழைப்பு' என்ற பெயரில் அவற்றோடு மோதி, தங்களையே வலுவற்றவர்களாக்கிக் கொள்பவர்கள்.

ஒவ்வொரு காலையிலும், 'இன்றைய நாளை எப்படிக் கடக்கப் போகிறேனோ?' என்ற 'மலை'ப்போடு எழுந்திருப்பவர்கள்.

மாற்ற முடியாத விஷயங்களையும் மாற்ற முயற்சிப்பவர்கள்.

**ஆ. வாழ்க்கையை 'ஆறாய்' பார்ப்பவர்கள்**
ஆறு தன்னை வந்தடைந்த எதையும் தன் பாதையில் இழுத்துச்செல்லும், இவர்களும் வாழ்க்கை போகும் பாதையில், 'மனம்போன போக்கில்' போகிறவர்கள்.

தங்களுக்கென்று இலட்சியம் வைத்துக்கொண்டு எதிர்நீச்சல் போடாதவர்கள்.

எதையும் சாதிக்க வேண்டும் என்ற துடிப்பு இல்லாதவர்கள்.

